# உலகே உனக்கு கண் இல்லையா....

உலகே உனக்கு கண் இல்லையா எங்கள் தமிழீழ மண் என்ன மண் இல்லையா

உலக மக்கள் தான் மக்களா   எங்கள் தமிழீழ மக்கள் என்ன கற்களா

– உலகே உனக்கு கண் இல்லையா

எங்கள் தாய்மண்ணின் அடிமை நிலை கண்டும்   நீ ஏன் தூங்கினாய்

எங்கள் தாய் மண்ணை அழித்த பகைவனை   ஏனோ தாங்கினாய்

தமிழீழம் இழிவானதா  எங்கள் தன்மானம் மலிவானதா

– உலகே உனக்கு கண் இல்லையா

பாலஸ்தீனர்கள் துடித்தபோது அவர்   பக்கம் நீ இருந்தாய்

ஈழத்தமிழர்கள் நாளும் மடிகிறோம்   ஏனோ எமை மறந்தாய்

தமிழீழம் இழிவானதா  எங்கள் தன்மானம் மலிவானதா

– உலகே உனக்கு கண் இல்லையா

பள்ளியில் வாழும் பிள்ளைகள் தலையிலும்   பாயும் குண்டுகள் பார்

கொள்ளை நீதிகள் சொல்லும் உலகே உன்    குரலை பறித்தது யார்

தமிழீழம் இழிவானதா  எங்கள் தன்மானம் மலிவானதா

– உலகே உனக்கு கண் இல்லையா

கொலைஞர் சிங்களர் படைக்கு   ஆயுதம் நீயே கொடுப்பதா

புலிகள் அறப்போரை வாழ்த்த மறந்து நீ   வசைகள் தொடுப்பதா

தமிழீழம் இழிவானதா  எங்கள் தன்மானம் மலிவானதா

– உலகே உனக்கு கண் இல்லையா